**ஜனவரி – 30**

# TNPSC துளிகள்

- இந்தியாவில் உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட அதிவேக ரயிலான "ரயில் 18" ஆனது "வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்" எனப் பெயரிடப்பட்டு டெல்லி மற்றும் வாரனாசிக்கு இடையே இயக்கப்படுகிறது. "ரயில் 18" ஆனது இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் சென்னையின் ஐ.சி.எப்-இல் உருவாக்கப்பட்ட உலகத் தரம் வாய்ந்த இரயிலாகும்.
- நேபாளத்தின் ரோஷித் பவுடேல் சச்சினின் சாதனையை (16 வருடம் மற்றும் 213 நாட்கள்) முறியடித்து இளம் வயதில் ஐம்பது ரன்களை கடந்த முதல் வீரராக (16 வருடம் மற்றும் 146 நாட்கள்) ஆகியுள்ளார்.
- உலக சுகாதார அமைப்பின் (WHO – World Health Organization) தென்கிழக்கு ஆசியாவின் பிராந்தியத் தலைவராக டாக்டர் பூனம் கேத்ரபால் சிங் இரண்டாவது ஐந்து ஆண்டு காலத்திற்கு மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் WHO-ன் தென்கிழக்காசிய பிராந்தியத்திற்குத் தலைவரான முதல் பெண்மணி ஆவார்.
- IRCTC-யின் இரயில்களின் தூய்மைத் தன்மை ஆய்வின்படி, தெற்கு இரயில்வேயானது நாட்டின் தூய்மையான இரயில் நிலையங்களில் முதலிடம் வகிக்கின்றது.
    - தூரந்தோ ரயில்களானது உயர் மதிப்புடைய ரயில்களில் குறைந்த தூய்மையுடன் உள்ளன. அதே வேளையில் தேஜாஸ் மற்றும் சதாப்தி ஆகிய இரயில்கள் மிகவும் தூய்மையானதாக உள்ளன.
- ஆண்ட்ரி மேகின் எழுதிய லா வி டி'உன் ஹோம் இன்கோன்னு (Andrei Makine's "La vie d'un homme inconnu" - தெரியாத மனிதனின் வாழ்க்கை) எனும் புத்தகத்தின் மொழிபெயர்ப்பானது இலக்கிய மொழிபெயர்ப்பிற்காக ரோமைன் ரோலண்ட் புத்தக பரிசினை வென்றுள்ளது.
    - இந்த புத்தகமானது S.R. கிச்சின மூர்த்தியால் மொழிபெயர்க்கப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## வீரச் செயலுக்கான அண்ணா விருது

- சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழக முதல்வர் வீரச் செயல்களுக்கான அண்ணா விருதினை 3 நபர்களுக்கு வழங்கினார்.
    - G. ரஞ்சித்குமார் – 2018 மார்ச்சில் குரங்கணி காட்டுத்தீயில் சிக்கிய 8 மலையேறுவோரைக் காப்பாற்றியவர்.
    - N. சூர்யகுமார் (திருமங்கலம், சென்னை) – கொள்ளையர்களைக் கைது செய்தவர்.
    - R. ஸ்ரீதர் (தஞ்சாவூர்) – ஏரியில் மூழ்கிய 6 பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றியவர்.
- மேலும் முதல்வர் தீவிர நெல் விளைச்சல் சாகுபடி முறையைப் பயன்படுத்தி நெல் பயிரிடுவதில் அதிக மகசூலைப் பெற்ற புதுக்கோட்டை மாவட்ட விவசாயியான S.

சேவியர்க்கு சிறப்பு விருதையும் வழங்கினார்.

## குடியரசு தின அணி வகுப்பு விருதுகள்

- சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பின் மூலம் மொத்தமாக மாநில அரசின் 15 துறைகள் தங்களது சாதனைகளை அணிவகுப்பு வாகனங்கள் மூலம் வெளிப்படுத்தின.
- சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது முதல் பரிசினை வென்றது.
- வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையானது இரண்டாவது பரிசினையும் சுகாதாரத் துறை 3-வது பரிசினையும் பெற்றது.





# தேசியச் செய்திகள்

## உலகின் மிக நீளமான விரைவுப் பாதை

- கங்கா விரைவுப் பாதையை கட்டுமானம் செய்வதற்கு உத்தரப் பிரதேச அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- மேலும் இந்த பாதையானது உலகின் மிக நீளமான விரைவுப் பாதையாக இருக்கும் எனவும் அறிவித்துள்ளது.
- இந்த விரைவுப் பாதையானது பிரயாக்ராஜ் (அலகாபாத்) எனும் நகரிலிருந்து மேற்கு உத்திரப் பிரதேசத்திற்கு சிறந்த இணைப்பை அளிக்கும்.
- இந்தியாவில் உள்ள சாலைகள் அமைப்பில் விரைவுப் பாதை என்பது உயர் தரமான சாலைகளாகும்.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையமானது விரைவுப் பாதைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பிற்குப் பொறுப்புடையதாகும்.

## மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-ல் திருத்தங்கள்

- இந்திய தேர்தல் ஆணையமானது (ECI – Election Commission of India) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள முயல்கிறது.
- இது தேர்தல் தொடங்குவதற்கு முன்னதான கடைசி 48 மணி நேரங்களுக்கு அச்சு

ஊடகங்கள், சமூக வலைதளங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் வழியாக அரசியல் விளம்பரங்கள் செய்வதற்குத் தடை விதிக்கிறது.

- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 126 ஆனது தேர்தல் தொடங்குவதற்கு முன்னதாக 48 மணி நேரத்திற்கு (அமைதி காலத்தில்) எந்தவொரு மின்னணு ஊடகமும் அரசியல் விளம்பரங்களை ஒளிபரப்பு செய்வதைத் தடை செய்கிறது.
- மேலும் ECI ஆனது கடைசி 48 மணி நேரத்தில் செய்தித் தாள்களில் வெளியிடப்படும் பிரச்சாரத் தகவல்களுக்கு முன் சான்றிதழ் பெறுவதைக் கட்டாயமாக்கியுள்ளது.

*The Commission has sought inclusion of 'print media' and 'other entities' within the ambit of Section 126 (1) (b). The other entities would refer to all social media formats*

# மாநிலச் செய்திகள்

## ஒலிம்பிக்ஸ் நடவடிக்கை

- கேரளாவின் விளையாட்டுத் துறை மற்றும் மாநில விளையாட்டு மன்றம் ஆகியவற்றால் மேலாண்மை செய்யப்படும் நிபுணத்துவத் திட்டமான "ஒலிம்பிக்ஸ் நடவடிக்கை"யானது கேரளாவில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் 2020ல் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காக 11 துறைகளில் 123 தடகள வீரர்கள் பயிற்சியளிக்கப்படுவர்.
- இந்தியா மற்றும் வெளிநாட்டிலிருந்து சிறந்த பயிற்சியாளர்களின் உதவியுடன் இந்த விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சியளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கேரளா சாகித்ய அகாடமி விருதுகள்

- 2017 ஆம் ஆண்டிற்கான கேரளா சாகித்ய அகாடமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- சிறந்த நாவலுக்கான பிரிவில் VJ ஜேம்ஸ் எழுதிய நிரீஸ்வரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- வீரன்குட்டியால் எழுதப்பட்ட மின்டப்ராணி ஆனது சிறந்த கவிதையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- அய்மனாம் ஜானின் எத்தரா சாரசாரங்களுடே சரித்ர புஸ்தகம் ஆனது சிறந்த சிறுகதைப் புத்தகத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.




# விளையாட்டுச் செய்திகள்

## இந்தோனேசியா மாஸ்டர்ஸ் பட்டம் 2019

- அலுவல்பூர்வமாக டைஹாட்சு இந்தோனேசியா மாஸ்டர்ஸ் 2019 என்றறியப்படும் பூப்பந்தாட்ட போட்டித் தொடரான இந்தோனேசியா மாஸ்டர்ஸ் 2019 பட்டம் ஆனது இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்றது.
- இந்த போட்டியானது உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பின் அங்கீகாரத்துடன் இந்தோனேசியாவின் பூப்பந்தாட்ட சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தியாவில் சாய்னா நெஹ்வால் மகளிர்க்கான ஒற்றையர்க்கான பிரிவில் தனது முதல் இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பட்டத்தை ஸ்பெயினின் கரோலினா மரின் காயத்தின் காரணமாக இறுதிப் போட்டியில் வெளியேறியதால் வென்றார்.
- உலகின் முதலிடத்தில் உள்ள ஆட்டக்காரரான ஜப்பானின் கென்டோ மோமோடாவை வீழ்த்தி டென்மார்க்கின் ஆண்டர்ஸ் அன்டன்சென் தனது முதலாவது இந்தோனேசிய மாஸ்டர் பட்டத்தை வென்றார். மேலும்
    - ஆடவர் இரட்டையர் பிரிவில் – மார்கஸ் பெர்னால்டி கிதியோன் & கெவின் சஞ்சயா (இந்தோனேசியா),
    - பெண்கள் இரட்டையர் பிரிவில் – அயகா தகாஹாஷி & மிசாகி மாட்சுட்டோமோ (ஜப்பான்),
    - கலப்பு இரட்டையர் பிரிவில் – ஜெங் சியாவி & ஹீவாங் யாகியாங் (சீனா)

  ஆகியோரும் பட்டம் வென்றனர்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26

- உலக சுங்க அமைப்பின் முதல் மாநாட்டை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் நாள் சர்வதேச சுங்க தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது எல்லைப் பாதுகாப்பில் சுங்க அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள்

ஆகியோரின் பங்குகளை அங்கீகரிக்கின்றது.




- ❖ இவ்வாண்டின் சர்வதேச சுங்க தினமானது "தடையற்ற வர்த்தகம், சுற்றுலா மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிற்காக சிறப்பான எல்லைகள்" எனும் முழக்கத்துடன் கொண்டாடப்பட்டது.

## தரவு பாதுகாப்புத் தினம் – ஜனவரி 28

- ❖ தரவு தனியுரிமை தினம் என அறியப்படும் தரவு பாதுகாப்புத் தினமானது விழிப்புணர்வை அதிகரிக்கவும் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பை ஊக்குவிக்கவும் உலகின் சில பகுதிகளில் ஜனவரி 28 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த நிகழ்வானது 2007 ஜனவரி 28 அன்று ஐரோப்பிய தரவு பாதுகாப்புத் தினமாக ஐரோப்பிய மன்றத்தால் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- ❖ தற்போது இந்த தினமானது 47 ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வருடாந்திர தினமாக அனுசரிக்கப்படுகிறது.

# இதரச் செய்திகள்

## லெனின் கிராட் முற்றுகையின் 75 ஆம் ஆண்டு நிறைவு

- ❖ இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனியின் நாஜிக்களின் மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பின் மூலம் லெனின்கிராட் என்றழைக்கப்படும் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் நகரத்தின் 872 நாட்கள் முற்றுகையை முடிவுக்கு கொண்டு வந்த தினத்தின் 75 ஆம் ஆண்டின் நிறைவை ரஷ்யா கொண்டாடுகிறது.
- ❖ பின்னாட்களில் லெனின்கிராட் என்றழைக்கப்படும் இந்த நகரத்தின் முற்றுகையானது 1944 ஆம் ஆண்டு ஜனவரி 27-ல் சோவியத்தின் இராணுவமானது நாஜிக்களை வெளியேற்றும் வரை சுமார் 2 ½ ஆண்டுகளுக்கு நீடித்தது.
- ❖ முன்னாள் சோவியத் யூனியன் அரசானது 1945ல் லெனின்கிராட்டிற்கு ஆர்டர் ஆப் லெனின் என்ற அங்கீகாரத்தை வழங்கியது. பின்னர் 1965 ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் தலைமை நகரத்திற்கு இந்த பெயர் வழங்கப்பட்டது.

## ஆஸ்திரேலிய தினம் - ஜனவரி 26

- ❖ ஆஸ்திரேலிய தினம் என்பது வருடந்தோறும் ஜனவரி 26 அன்று

கொண்டாடப்படுகின்ற அதிகாரப் பூர்வமான தேசிய தினமாகும்.




- இது 1778 ஆம் ஆண்டு நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஜாக்சன் துறைமுகத்திற்கு முதல் இங்கிலாந்து கப்பல் வந்தடைந்த தினத்தின் நினைவைக் குறிக்கிறது.
- 1946 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் முதல் நாடு முழுவதும் ஆஸ்திரேலிய தினமாக அரசு விடுமுறையுடன் கொண்டாடப்படுகிறது.

- - - - - - - - - - - - - -